உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் நடைபெறும் கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி வெற்றி பெற வாழ்த்து

# உரக்கப் பேச, உடன்பிறப்புகளே வருக!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜூன் 14-

கலைஞர் 100-ல் புதிய பேச்சாளர்களை அடையாளம் காண இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் கழக இளைஞர் அணியும், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியும் இணைந்து நடத்தவுள்ள கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி வெற்றி பெற வாழ்த்துவதாகக் குறிப்பிட்டுள்ள கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உரக்கப் பேசஉடன்பிறப்புகளேவருகஎனஅழைப்புவிடுத்துள்ளார்.

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

**பகுத்தறிவையும் இனமான உணர்வையும் தட்டியெழுப்பும் ஆற்றல்மிக்க பேச்சாளர்கள் தமிழ் மண்ணில் விளைவித்த புரட்சியால் தலைநிமிர்ந்து நிற்கிறோம்! சொல்லாற்றலில் தலைவர் கலைஞருக்கு அவரே நேர். கலைஞர் 100-ல் புதிய பேச்சாளர்களை அடையாளம் காணவும் - தமிழ்ச்சமூகத்துக்கு அடையாளம் காட்டவும் தம்பி உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் கழக இளைஞர் அணியும், கலைஞர் செய்திகள் தொலைகாட்சியும் இணைந்து நடத்தவுள்ள "என் உயிரினும் மேலான - கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி" வெற்றி பெற வாழ்த்துகிறேன்! எத்தனையோ தலைவர்களை அடையாளம் காட்டிய மேடை உங்களுக்காகக் காத்திருக்கிறது. உரக்கப் பேச, உடன்பிறப்புகளே வருக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அமெரிக்காவில் உள்ள கென்சா பல்கலைக்கழகத்தில் "டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி சமூக நீதி இருக்கை உருவாக்குவதற்கான அனுமதியை சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவரும், சட்டக்கதிர் ஆசிரியருமான டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் பெற்றுள்ளதையும் இதற்கான வைப்புத் தொகையை செலுத்துவதற்கு கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அரசே வழங்கிட வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்து உள்ளார். இதனைத் தொடர்ந்து தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளிலும் வெற்றி பெற்றதற்கு வாழ்த்து தெரிவித்தார்.

“நீட் விலக்கு நம் இலக்கு” - நீட் தேர்வு தொடர்ந்தால்

# ஏழை எளிய மாணவர்களின் மருத்துவப் படிப்பு எட்டாக் கனியாக மாறிவிடும்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, ஜூன் 14-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

2017 ஆம் தொடங்கி இந்தியாவில் நீட் தேர்வு முறை இருந்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2016ஆம் ஆண்டு இறுதியிலேயே நீட் தேர்விற்கு எதிரான கூட்டங்களை தொடர்ந்து நடத்தி வந்தார்.

நீட் தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்கு நீதி அரசர் ஏ.கே. இராஜன் தலைமையிலான குழு அமைத்து அக்குழுவின் பரிந்துரைகளை சட்ட மசோதாவாக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு ஆளுநர் மூலம் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேதகு குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்துறை அமைச்சகமும் தமிழ்நாட்டில் இருக்கின்ற உயர்கல்வித்துறை, மருத்துவக்கல்வித்துறை, ஆயுஷ் போன்ற பல்வேறு நிர்வாகங்களுக்கு சிறிய அளவிலான கேள்விகளை கேட்டு அனுப்பி இருந்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, கேட்கப்பட்ட விளக்கங்களுக்கு பதில்கள் தொடந்து அனுப்பப்பட்டு வருகிறது. இந்தநிலையில் நீட் தேர்வில் ஏற்பட்டிருக்கும் குழப்பங் களும், குளறுபடிகளும் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வருகிறது. 2021-ஆம் ஆண்டு நீட் தேர்வில் 720/720 மதிப்பெண் பெற்றவர்கள் 2 மாணவர் தான். 2022 பொறுத்தவரை பூஜ்ஜியம். 2023 பொறுத்தவரை 2 மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றிருந்தனர். இந்த ஆண்டு அபரிதமாக வளர்ந்து 67 என்று வந்திருக்கிறது.

இதில் தான் அனைவருக்கும் குழப்பமும், குளறுபடிகளும் ஏற்பட்டிருக்கின்ற காரணமாக தென்பட்டிருக்கிறது. இதில் National Testing Agency என்று சொல்லக்கூடிய தேசிய தேர்வு முகமை அவர்கள் சொன்ன காரணம் என்பது 67 பேர் முதல் மதிப்பெண் பெற்றதற்கும், 718, 719, 716 போன்ற மதிப்பெண் பெற்றவர்கள் அடங்கிய பட்டியல் மூலம் குளபடிகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் 718, 719 என்று பலருக்கு மதிப்பெண்கள் இருந்தது. இது சாத்தியமில்லாத ஒன்று. ஏனெனில் 180 வினாக்கள் அடங்கியது தான் நீட் தேர்வு. ஒவ்வொரு வினாக்களுக்கும் 4 மதிப்பெண்கள். ஒரு கேள்வியை தேர்வு செய்து பதிலளித்தால் 4 மதிப்பெண். அவர் தவறுதலாக பதிலளித்திருந்தால் ஒரு அபராத மதிப்பெண்களோடு சேர்த்து 5 மதிப்பெண் அவர்கள் பெற்ற மதிப்பெண்களிலிருந்து குறைந்து விடும். ஆக 180 வினாக்களையும் அவர்கள் Attend செய்திருந்தால் சரியான பதிலளித்து இருந்தால் 720 மதிப்பெண் கிடைக்கும். எழுதாமல் விட்டிருந்தால் இருந்தால் 716 கிடைக்கும். அதுவே தவறுதலாக எழுதியிருந்தால் 715 கிடைக்கும். 715 என்பது தவறுதலான கேள்விக்கு கிடைக்கும் மதிப்பெண்.

இதில் 718ம், 719ம் எப்படி கிடைத்திருக்கும் என்பது கல்வியாளர்களின் கேள்வி, மாணவர்களின் கேள்வி. இந்தநிலையில் தான் தேசிய தேர்வு முகமை, இவர்களுக்கு கருணை மதிப்பெண்கள் தரப்பட்டது என்று சொல்கிறார்கள். இந்த கருணை மதிப்பெண்கள் எப்படி வழங்கப்படுகிறது என்று கேட்டால் உச்சநீதிமன்றத்தில் 2018ஆம் ஆண்டு ஒரு தீர்ப்பு வந்தது, அந்த தீர்ப்பின் அடிப்படையில் வழங்கினோம் என்று சொல்கிறார்கள்.

2017க்கு பிறகுதான் நீட் தேர்வு என்பது நடைமுறைக்கு வந்தது. ஆனால் 2018ஆம் ஆண்டு வந்த தீர்ப்பினைப் பொறுத்தவரை நீட் தேர்விற்கான தீர்ப்பே இல்லை. இது நேரபற்றாக்குறைக்கான Grace Mark தரப்பட வேண்டும் என்று தீர்ப்பில் தெரிவிக்கப்படவில்லை. இதற்கு National Testing Agency ஆதாரமாக காட்டப்படும் தீர்ப்பு என்பது 2018இல் Common Law Admission Test என்று சொல்லக்கூடிய தேர்விற்கு கொடுத்த தீர்ப்பு.

இந்த தேர்விற்கான தீர்ப்பை நீட் தேர்விற்கு பொருந்தும் வகையில் இவர்கள் எடுத்துக் கொண்டு நீட் தேர்விற்கு கருணை மதிப்பெண்கள் வழங்கியுள்ளனர். இது மிகப்பெரிய அளவிலான மோசடி. காரணம் Common Law Admission Test என்பது ஆன்லைன் வழி தேர்வு. இவர்களுக்கு இத்தேர்வு நடைபெறும் கால அளவுகள் என்பது மிகத் துள்ளியமாக கண்டறிய முடியும். ஆனால் Offline Test என்பது 3 மணி நேரம் 20 நிமிடம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

கடந்த 3 ஆண்டுகளாகவே தேர்வு நேரம் என்பது பிற்பகல் 2 மணிக்கு தொடங்கி மாலை 5.20 வரை நடத்துகிறார்கள். அதனால் நேரடியாக தேர்வு எழுத அனுமதிக்கும் நேரம் என்பது 3.20 மணி நேரம் ஆகும். பிற்பகல் 2 மணிக்கு மாணவர்கள் சரியாக உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். மாலை 5.20 மணிக்கு வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

இப்படி தேர்வு நடைமுறை இருக்கும்போது இந்த மாணவர்களுக்கு எப்படி நேரப்பற்றாக்குறை இருக்க முடியும். நேரம் தாழ்ந்து வருபவர்களை தேர்வுக்கூடத்திற்கு உள்ளே அனுமதிக்க மாட்டார்கள். இப்படி இருக்கும்போது நேரப்பற்றாக்குறை எந்த அளவில் பொருந்தும் என்று கல்வியாளர்களும், குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் Grace mark வழங்கியத்தில் குளறு படிகள் ஏற்பட்டிருக்கிறது, மாணவ சமூகத்திற்கு சரியான நீதியை வழங்கிட வேண்டும், நீட் இலக்கு தான் தமிழ்நாட்டின் இலக்கு, எனவே இந்த குழப்பங்களுக்கு ஒரே தீர்வு நீட் விலக்கு வேண்டும் என்று தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்திருந்தார்.

மேலும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நீட் தேர்வு முடிவு வந்த நாளிலேயே இக்குளறுபடிகளை கண்டறிந்து தொடர்ந்து பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் தெரிவித்து வருகிறோம். எனவே இன்று உச்சநீதிமன்றத்தில் National Testing Agency 1563 மாணவர்களுக்கு Grace Mark வழங்கப்பட்டிருக்கிறது, இந்த 1563 மாணவர்களுக்கும் மறு தேர்வு அவர்கள் விரும்பினால் நடத்தலாம் என்கின்ற வகையில் இருந்த நிலைப்பாட்டில் விலக்கி கொண்டிருக்கிறார்கள்.

மேலும் 23 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் நீட் தேர்வினை எழுதியிருக்கிறார்கள். இதில் 1563 மாணவர்களை விலக்கி கொண்டால் தேர்வினை Re Publish செய்ய வேண்டும். மேலும் தேர்வினை Re publish செய்ய National Testing Agency ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இப்படி பல்வேறு குழப்பங்களுக்கிடையே தேர்வு முடிவுகளால் இந்தியாவில் இருக்கின்ற ஒட்டுமொத்த மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலான உச்சகட்ட மோசடி, அரியானா மாநிலத்தில் உள்ள பரிதாபாத் என்கின்ற இடத்தில் ஒரு தேர்வு மையத்தில் இருந்து மட்டும், 8 பேர் முதல் 100 இடங்களில் இடம் பெற்றிருக்கிறார்கள். அதில் 6 பேர் 720/720 மீதம் 2 பேர் 718, 719 என்கின்ற வகையில் மதிப்பெண்களை பெற்றிருக்கிறார்கள்.

இது எப்படி சாத்தியம் ஆகும். இதில் எங்கேயெல்லாம் தவறுகள் நடந்து வருகிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். National Testing Agency இனிமேல் தவறு நடந்தவற்றை கண்டுபிடித்து நடவடிக்கை மேற்கொள்வோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நாம் சொல்வது National Testing Agency தானே தவறு செய்திருக்கிறது. கருணை அடிப்படையிலான மதிப்பெண்களை தருவதற்கு நீங்கள் முடிவெடுத்த போது யாரிடம் நீங்கள் தெரிவித்தீர்கள்.

மொத்தம் நீட் தேர்வு எழுதிய 23 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இது தெரிந்திருக்க வேண்டும் அல்லவா, நேரப்பற்றாக்குறை ஏற்பட்டால் கருணை மதிப்பெண்கள் தரப்படும் என்கின்ற செய்தி இவர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும், நீங்களாகவே Common Law Admission Test தேர்விற்கான உச்சநீதிமன்ற தீர்ப்பு அடிப்படை யில் கருணை மதிப்பெண்கள் வழங்கியிருக்கிறீர்கள். இது ஒட்டுமொத்த இந்திய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அநீதியாகும். இதற்கெல்லாம் ஒரே தீர்வு ஒன்றிய அரசு நீட் தேர்வினை ஒழிப்பதற்கு முனைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

கோபண்ணா தலைமையில் - மூத்த பத்திரிக்கையாளர்

# சின்னக்குத்தூசி 90வது பிறந்தநாள்! வாழ்நாள் சாதனையாளர் விருது விழா!

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் - நக்கீரன் கோபால் - க.திருநாவுக்கரசு சிறப்புரை!



சென்னை, ஜூன் 14

சின்னக்குத்தூசி நினைவு அறக்கட்டளை சார்பில் மூத்த பத்திரிக்கையாளர் சின்னக்குத்தூசி அவர்களின் 90-ஆவது பிறந்தநாள் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கும் விழா 16.6.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் கவிக்கோ அரங்கம் 2-ஆவது மெயின் ரோடு சி.ஐ.டி. காலனி மயிலாப்பூரில் நடைபெறுகிறது.

நக்கீரன் கோபால் வரவேற்புரையாற்றுகிறார். நிகழ்ச்சிக்கு காங்கிரஸ் கோபண்ணா தலைமை வகிக்கிறார். திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு முன்னிலை வகிக்கிறார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பங்கேற்று வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்குகிறார். இதில் நடிகர் பொன் வண்ணன், இயக்குநர் கரு.பழனியப்பன், ஓவியக் கலைஞர் அமுதபாரதி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சியை கோ.வி. லெனின் தொகுத்து வழங்குகிறார். ஆவுடையப்பன் நன்றியுரையாற்றுகிறார்.


